செ.வெ.எண்: 17 /2019 நாள்: 04.10.2019

**வாக்காளர் சரிபார்ப்புதிட்டத்தின் கீழ் வாக்காளர்கள் தங்களது பெயர் விவரங்களை 15.10.2019 -க்குள் சரிபார்த்துகொள்ள மாவட்டஆட்சித் தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்!!!**

இந்தியதேர்தல் ஆணையத்தின் உத்திரவுப்படி, வாக்காளர்கள் தங்களது பெயர் விவரங்களை வாக்காளர் பட்டியலில் தாங்களாகவே சரிபார்த்து கொள்வதற்கு வாக்காளர் சரிபார்க்கும் திட்டம் 01.09.2019 அன்று துவங்கி நடைபெற்றுவருகிறது. வாக்காளர் சரிபார்ப்புதிட்டம் 15.10.2019 வரை செயல்படுத்தப்படவுள்ளது இதன் ஓர பகுதியாக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும், அரசு அலுவலகங்களிலும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் வாக்காளர் சரிபார்ப்புதிட்டத்தின் கீழ் தங்களது பெயர்களை**www.nvsp.in**என்ற இணையதளம் மூலமாகவும்,**Voter Help line**மொபைல் செயலி மூலமாகவும் சரிபார்ப்பதற்காக, வாக்காளர் சேவைமையங்கள் திருப்பூர் மாவட்டஆட்சியர் அலுவலகம்,சார் ஆட்சியர் அலுவலகம்,வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள்,திருப்பூர் மாநகராட்சி அலுவலகம்,அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி மண்டல அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றில் செயல்பட்டுவருகிறது. எனவே, மேற்படி அலுவலகங்களுக்கும் வருகை தரும் பொதுமக்கள் வாக்காளர் சேவை மையங்களின் மூலமாக தங்களது வாக்காளர் பதிவினை சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், பொதுமக்கள் வாக்காளர் பதிவினை சரிபார்க்க தங்களது வாக்காளர் அடையாள அட்டையினை தவறாமல் எடுத்து வருமாறும், வாக்காளர் பெயரினை உறுதிபடுத்துவதற்காக ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை, குடும்பஅட்டை, வங்கிகணக்குபுத்தகம், பான் கார்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை கொண்டு வருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், கிராமநிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் களஆய்விற்கு வரும் பொழுது அவர்கள் மூலமாகவும் வாக்காளர் பதிவினை சரிபார்க்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 15.10.2019-ம் தேதி வரைவாக்காளர் சரிபார்ப்புதிட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால் மேற்படி தேதிக்குள் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் தங்களது வாக்காளர் பதிவினை சரிபார்த்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**